1974-75 ஆம் ஆண்டுக்கான தமிழ் நாட்டு நிர்வாக அறிக்கை வெளியிடப்பட்டது. 1976 டிசம்பரில் எழுதுபொருள் அச்சுத் துறை இயக்குநரால் அதன் படிகள் அரசின் அஞ்சல் பட்டியலின்படி துறைத் தலைவர்களுக்கும், நிறுவனங்களுக்கும், சட்டமன்ற மேலவை உறுப்பினர்களுக்கும் அனுப்பப்பட்டன. அப்போது சட்டமன்றப் பேரவை கலைக்கப்பட்டிருந்ததால், சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்களுக்கு அந்த அறிக்கைகள் வழங்கப்படவில்லை. அண்ணா சாலையில் உள்ள அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம் பொது மக்களுக்கு இந்த அறிக்கையின் 18 பிரதிகளை விற்பனை செய்துள்ளது. தற்போது 288 பிரதிகள் அங்கு விற்பனைக்கு உள்ளன. இதனால் இவ்வறிக்கையின் பிரதிகள் எரிக்கப்பட்டன என்பது உண்மையல்ல.

எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். வீராசாமி தெரிவித்த கருத்துக்களில் உண்மை ஏதும் இல்லை என தெரிவித்துக் கொள்கிறேன்.

(உறுப்பினர் திரு. ஆற்காடு நா. வீராசாமி எழுந்தார்.)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இந்த அறிக்கையின் மீது எந்த விதமான வினவும் எழுப்பப்படலாகாது என்று விதியில் தெளிவாக இருக்கிறது. அதைத் தெரிந்த நீங்களே கேட்டால், என்ன செய்வது ? அமருங்கள்.

5. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்தி ஏழாவது அறிக்கையை அளித்தல்.

திரு. எம். சங்கரலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே, அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்தி ஏழாவது அறிக்கையை தங்களுடைய அனுமதியோடு இங்கே அளிக்கிறேன். உறுதி மொழிகளைப் பரிசீலனை செய்து அவற்றின் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைக் கண்டு சில உறுதிமொழிகளின் பேரில் சரியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தி, பல உறுதி மொழிகளை எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் என்பதைப்பற்றி ஆராய்வதற்காக அண்டை மாநிலங்களுக்குச் சென்று இந்தக் குழு தன்னுடைய வேலையை சிறப்புறச் செய்து இந்த அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.